DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 114/2023

Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW1(LW3)
Defence

Name : Ezhmalai

Father Name /
Husband Name : Ponnupillai

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 22nd April 2025.

எதரிகள் 1,2, 5 இறந்துவிட்டனர். 3 மற்றும 4 எதிரிகள் ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் சின்னமுதலியார் சாவடியில் குடியிருந்து விவசாய் வேலை செய்துவருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் மணிகண்டன் என்பவரை எனக்கு தெரியும். அவர் தற்போது இறந்துவிட்டார். ஆஜர் எதரிகளை எனக்கு தெரியும். சின்னமுதலியார் சாவடியில் உள்ள ஜனகம்பாள் என்பவரிமிருந்து 1983ல் கிரையம பெற்றேன். நான் வாங்கிய இடத்திற்கு பக்கத்திலேயே எனது

அம்மா இருசம்மாள் என்பவருக்கு சொந்தமாக 3 1/2 செண்டு இருந்தது. 2 சொத்தையும் சேர்ந்து மொத்தம் 7 செண்ட் இடத்தை 1987ம் வருடம் குயிலாப்பாளையத்தைச் சேர்ந்த தமிழ்ச்செல்வம் என்பவருக்கு நான் எனது அம்மா இருசம்மாள் எனது அக்கா அலமேலு மற்றும் லட்சுமி ஆகியோர்கள் சேர்ந்து பவர் கொடுத்தோம். அந்த சொத்தை தமிழ்ச்செல்வம் என்பவர் ஒரு வருடம் கழித்து மணிகண்டன் எனப்வருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார். மணிகண்டன் அவர் வாங்கிய 7 செண்ட் இடத்தை வேலி அமைத்து சென்னைக்கு சென்றுவிட்டடார். ஒரு வருடம கழித்து மணிகண்டன் அவருடைய இடத்தை வந்து பார்த்தபோது வீரமுத்து ஏழுமலை நடேசன் மற்றும ஆறுமுகம் ஆகியோர்கள் மணிகண்டம் நிலத்தில் கொட்டகை அமைத்துக்கொண்டும் போலீ பத்திரம் தயார் செய்து கொண்டு எங்களது நிலம் என்று மணிகண்டனிடம் கூறியுள்ளார்கள்.

அதன்பிறகு அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டு மணிகண்டன் விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

(ஒம்)/- XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.